# மக்கள் தலைவர்களின் சமூகநீதிப் பயணங்கள் வரலாற்றில் எப்போதும் நிலைத்து நிற்கும்!

இன்றைய உலகில் பிளவுவாதமும், வெறுப்பும் அதிகரித்திருக்கிற வேளையில் ஒரு சில தலைவர்களே மனிதம் போற்றும் சமநிலைக்காக பாடுபட்டு வெற்றி பெறுவார்கள். அதுபோன்ற ஒரு மாபெரும் தலைவர்தான் போப் பிரான்சிஸ். கத்தோலிக்க திருச்சபை தலைவர் போப் ஆண்டவரின் மறைவை உலகமே துக்க நாளாக அனுசரிப்பதற்கு காரணம் அவரது மாபெரும் சீர்திருத்த பணிகள் தான். 140 கோடி மக்களைக் கொண்ட கத்தோலிக்க திருச்சபையின் தலைவராக வானளாவிய அதிகாரம் இருந்த போதிலும் அதனை எளிய மக்களின் மேம்பாட்டிற்காகவே பயன்படுத்தினார்.

மதத் தலைவராக இருந்த போதிலும், மதங்களைக் கடந்து உலக மக்களை நேசித்ததாலேயே இன்றைய தினம் உலகம் முழுவதும் போற்றப்படுகிறார். எல்லாருக்கும் எல்லாம் என்ற கொள்கையில் உறுதியாக இருந்ததால், திருச்சபையின் கதவுகளை அனைவருக்கும் திறந்தார். திருச்சபையால் பெரும்பாலும் விலக்கி வைக்கப்பட்ட LGBTQ வினர்களை ஏற்றுக்கொண்டார்.

திருநங்கை விசுவாசிகளின் ஞானஸ்தானத்தை அங்கீகரித்தார். ஏழைகள், சொந்த நாட்டைவிட்டு வெளியேறி வேறு நாட்டில் குடியேறிய புலம்பெயர் மக்கள் என விளிம்புநிலை மக்களை பாதுகாப்பதில் உறுதியாக இருந்தார் போப் ஆண்டவர். தன் பாலினத்தவர்களை புறக்கணிக்கும் பழமைவாத்தை எதிர்த்து குரல் எழுப்பினார். இதுபோன்ற முற்போக்கான செயல்களின் மூலம் திருச்சபைக்குள், பாரம்பரியவாதிகளிடம் இருந்து கடுமையான எதிர்ப்புகளை எதிர்கொண்ட போதிலும் மக்கள் பக்கமே நின்றார்.

குரலற்றவர்களின் குரலாக போப் பிரான்சிஸ் இருந்ததால்தான் அவரை மக்களின் போப் என்று கொண்டாடி வருகின்றனர். விவகாரத்து பெற விரும்பும் கத்தோலிக்கர்கள் தேவாலயத்தில் மறுமணம் செய்து கொள்ளும் வகையில் திருமணரத்து செயல்முறையை எளிமையாக மாற்றும் வகையில் சீர்திருத்தத்தை மேற்கொண்டார். மதநல்லிணக்கத்தை அழுத்தமாக வலியுறுத்தி வந்த போப் பிரான்சிஸ், கத்தோலிக்கர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையேயான உறவை மேம்படுத்தும் உடன்படிக்கையை முன்னெடுத்தார்.

இதற்காக அல் அசார் இமாமுடன் “மனித சகோதரத்துவ” உடன்படிக்கையிலும் கையெழுத்திட்டார். மதங்களுக்கு இடையேயான உரையாடல்களுக்காக போப் ஆண்டவரின் முன்னெடுப்புகள் கத்தோலிக்க உலகத்தைத் தாண்டியும் அவருக்கு பெரும் மரியாதையை பெற்றுத்தந்தன. ஏற்றத்தாழ்வு, வெறுப்பு, சர்வாதிகாரம் ஆகியவற்றின் ஆதிக்கம் சில காலங்கள் தலைதூக்கினாலும், போப் பிரான்ஸிஸ் போன்றவர்கள் அதனை சரி செய்யும் தலைவர்களாக உருவெடுத்து சமூகத்தை சமநிலைபடுத்துகின்றனர்.

**உயர்ந்த எண்ணம் கொண்ட தலைவர்களின் செயல்பாடுகள் எப்போதும் மக்களுக்காகவே இருக்கும் என்பதை உலகிற்கு எடுத்துரைக்கும் வகையில் திராவிட மாடல் நாயகர் முதலமைச்சர் தளபதி அவர்களும் தமிழ்நாட்டில் முற்போக்கான ஆட்சி செய்து வருகிறார். எல்லாருக்கும் எல்லாம் என்பது தான் முதலமைச்சர் தளபதியின் ஒரே கொள்கை. அதனால்தான், பொருளாதாரத்தில் பின் தங்கியிருக்கும் எளிய மக்களுக்கும், சமூகத்தால் புறக்கணிக்கப்படும் விளிம்புநிலை மக்களுக்குமான ஏராளமான நலத்திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறார்.**

உடலில் குறைபாடு உடையவர்களை கருணை உள்ளத்தோடு மாற்றுத்திறனாளிகள் என பெயரிட்டு அழைத்தார் முத்தமிழறிஞர் கலைஞர். அவரின் புதல்வரான எங்கள் தலைவர், விளிம்புநிலை சமூகத்தை பிரதான நீரோட்டத்திற்கு கொண்டுவரும் உன்னத சிந்தனையுடன் மாற்றுத்திறனாளிகளுக்கு உள்ளாட்சி பிரதிநிதித்துவம் அளித்து மானுட சமுதாயத்தில் உயர்ந்து நிற்கிறார்.

அன்றைய துணை முதலமைச்சர், இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டப்பேரவையில் அறிமுகப்படுத்தி நிறைவேற்றிய அருந்ததியருக்கான 3 சதவீத உள் ஒதுக்கீடு சட்டம், உயர் கல்வி நிறுவனங்களான மருத்துவம், பொறியியல், சட்டம், கலைக் கல்லூரிகளில் அந்தச் சமூகத்தினர் அதிக இடங்கள் பெற்று முன்னேற வழி ஏற்படுத்தியிருப்பது, சமத்துவத்தை நோக்கிய திராவிட மாடல் ஆட்சியின் சான்றுகளுள் ஒன்று.



**ஆவடி சா.மு.நாசர்,**
**சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர், திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர்**

புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், விடியல் பயணத் திட்டம், நான் முதல்வன் உள்ளிட்டவை சமூக நீதி பயணங்களை வலுப்படுத்தும் முத்தான திட்டங்கள். தமிழ்நாட்டைப் பின்பற்றி இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் மகளிர் உரிமைத் திட்டம் செயல்படுத்தபடுகிறது. இல்லம் தேடி மருத்துவம் திட்டத்திற்கு ஐ.நா அமைப்பு விருது அளித்து கவுரவித்திருக்கிறது.

**முதல்வரின் மனதிற்கு நெருக்கமான காலை உணவுத் திட்டம், வெளி மாநிலங்கள் மட்டுமல்லாமல் இங்கிலாந்து, கனடா போன்ற வெளிநாடுகளிலும் செயல்படுத்தப்படுகிறது.**

**முதலமைச்சர் வெற்றிகரமாக செயல்படுத்தியிருக்கும் அண்ணல் அம்பேத்கர் அயலக கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ், 174 மாணவர்கள் வெளிநாடுகளில் முதுகலை மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளை மேற்கொண்டு வருகின்றனர். நான் முதல்வன் திட்டத்தின் கீழ் முதல்வர்களை உருவாக்குகிறார் நம்முடைய முதலமைச்சர். “நான் மட்டும் முதல்வன் அல்ல; தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் முதல்வனாக வேண்டும்” என்ற உயர்வான எண்ணத்தின்படி, செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ் தற்போது 50 மாணவர்கள் ஐ.ஏ.எஸ் தேர்வில் வெற்றி பெற்று மக்களுக்கு சேவையாற்றவுள்ளனர்.**

இதுமட்டுமல்ல, இறையாண்மையை பாதுகாக்கவும் முன்களத்தில் இருந்து தீவிரமாக போராடி வருகிறார் கழகத் தலைவர். மதங்கள் வேறுபட்டிருந்தாலும், மனங்கள் ஒன்றுபட்டு இருக்க வேண்டும்! மனதால் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும்! அதுதான் பண்பட்ட முன்னேறிய சமூகத்துக்கு அடையாளமாக விளங்கிட முடியும்! அப்படிப்பட்ட சமூகமாகத்தான், தமிழ்ச் சமூகம் விளங்குகிறது! இதற்கு அடித்தளம் போட்டது, நம்முடைய திராவிட இயக்கம்! மக்களின் மத உணர்வுகளை மதித்து இறை வழிபாட்டுத்தலங்களை மேலும் வளப்படுத்துவதில் மிகுந்த அக்கறையுடன் செயல்படும் திராவிட மாடல் ஆட்சியில், 2,500க்கும் மேற்பட்ட கோயில்களின் திருப்பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு திருகுடமுழுக்குகள் செய்யப்பட்டுள்ளன.

ஜெருசலேம் புனித பயணம் செல்வதற்கான நிதியுதவி வழங்கும் திட்டத்தில், இப்போது ஒரு பயனாளிக்கு நிதி உதவியாக 37 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு இந்தத் திட்டத்தில் 600 பயனாளிகள் பயனடைகிறார்கள். இதில் 50 இடங்கள், கன்னியாஸ்திரிகளுக்கும், அருட்சகோதரிகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன. தொன்மை வாய்ந்த தேவாலயங்களைப் புனரமைக்கும் திட்டத்தின்கீழ், தேவலாயங்களை புனரமைக்கும் பணிகளும் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

சிறுபான்மையின மக்கள் பயன்பெற பல்வேறு நலத் திட்டங்களுக்கு கடந்த 4 ஆண்டுகளில் 405 கோடி ரூபாய் அளவில் அரசு நிதி தரப்பட்டிருக்கிறது. சிறுபான்மையின கிராமப்புற பெண் குழந்தைகளின் கல்வியை ஊக்குவிக்க 76 ஆயிரத்து 663 மாணவியருக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டிருக்கிறது.

இந்தியா என்ற பன்முகத்தன்மை கொண்ட நம்முடைய அழகிய நாட்டில், அனைவரும் சமத்துவமாக ஒற்றுமையாக இருக்க வேண்டும். இதற்கு தடையாக, மதத்தை அரசியலுக்குப் பயன்படுத்தி, மக்களின் உணர்வுகளைத் தூண்டி, பிளவுவாத அரசியல் செய்பவர்களை எதிர்ப்பதற்கு கழகத் தலைவர் எப்போதும் தயங்கியதில்லை.

ஒவ்வொரு குடிமகனும் அவரவர் மதங்களைப் பின்பற்றுவதற்கான உரிமையை பாதுகாப்பது அரசின் கடமை என்பதை அழுத்தமாக வலியுறுத்தும் நம்முடைய தலைவர், நாட்டின் மத நல்லிணக்கத்திற்கு இடையூறாக இருக்கும் வக்ஃப் திருத்த சட்டத்திற்கு எதிரான சட்டப் போராட்டங்களையும் தீவிரமாக முன்னெடுத்துள்ளார்.



காஷ்மீர் சிறப்புப் பிரிவு ரத்து, குடியுரிமைச் சட்டம் என நாடு முழுவதும் இருக்கும் இஸ்லாமியர்களுக்கு எந்த பிரச்சினை வந்தாலும் தமிழ்நாட்டில் இருந்துதான் முதல் குரல் ஒலிக்கும். அது கழகத்தின் ஜனநாயகக் குரலாக இருக்கும்.

இதுபோன்று சூழலில் தான், சமூநீதிக்காக வாழ்நாள் எல்லாம் பாடுபட்ட போப் ஆண்டவரின் மறைவுச் செய்தியைக் கேட்டு முதலமைச்சர் தளபதி அவர்கள் மிகுந்த வேதனையடைந்தார். சட்டப்பேரவை மூலம் இரங்கல் தெரிவித்ததோடு, அரசு சார்பில் துக்கமும் அனுசரிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

தமிழ்நாடு அரசின் பிரதிநிதிகளாக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சரான என்னையும், சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் அவர்களையும் ரோம் நகர் வாடிகனில் நடைபெறும் “மக்கள் போப்பின்” இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் பங்கேற்க அனுப்பி வைத்தார். மனிதம் போற்றும் கத்தோலிக்க திருச்சபையின் தந்தை போப் பிரான்சிஸுக்கு தமிழ்நாடு அரசு சார்பில் நேரில் மரியாதை செலுத்துவதற்கான நோக்கமும் இதுதான். இதை நான் மட்டும் சொல்லவில்லை, கத்தோலிக்க திருச்சபையின் கார்டினல்கள் ஓஸ்வால்டு கிரேசியஸ், கிளிமீஸ் உள்ளிட்டோரே வாடிகனிலேயே இதை பதிவு செய்திருக்கின்றனர்.

அதாவது, **“கத்தோலிக்க திருச்சபையில் முற்போக்கான சீர்திருத்தங்களை செய்த போப் பிரான்சிஸின் மகத்தான பணிகளுக்கு மரியாதை செலுத்தும் விதமாக சமூக நீதிக்கான நீண்ட பயணத்தை மேற்கொண்டுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தமிழ்நாடு அரசு சார்பில் பிரதிநிதிகளை அனுப்பி வைத்திருப்பதாக பாராட்டியிருக்கிறார்கள்”**

மக்கள் தலைவர்களின் பணிகள் எப்போதும் முடிவடையாது. அது, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதி போன்ற ஆளுமைகள் மூலம் தொடர்ந்துகொண்டே இருக்கும்.

---

### சமீபத்தில் நிதி ஆயோக் வெளியிட்ட செய்தியில்

## தரமான கல்வியை வழங்குவதில் தமிழ்நாட்டிற்கு 4வது இடம்!

### சட்டப் பேரவையில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பெருமிதம்!

சென்னை, ஏப். 27-

சட்டப் பேரவையில் பள்ளி கல்வித்துறை மானியத்தின் மீது பா.ஜ.க. உறுப்பினர் ஜி.கே.மணி பேசும் போது, குறுக்கிட்டுப் பேசிய அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சமீபத்தில் நிதி ஆயோக் வெளியிட்ட செய்தியில், தரமான கல்வியை வழங்குவதில் தமிழ்நாடு 4வது இடத்தில் இருக்கிறது என்பது நமக்கான பெருமை என்று குறிப்பிட்டார்.



சட்டப் பேரவையில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி குறிப்பிட்டதாவது:-

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர், ஜி.கே. மணி அவர்கள் பல்வேறு கருத்துகளை இங்கே எடுத்து வைத்திருக்கிறார். குறிப்பாக Moral Science பாடம் கண்டிப்பாக வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். Announcement-ல் அது சார்ந்து நல்ல செய்தி வரும். உள்நாட்டு உற்பத்தியிலிருந்து மூன்று மடங்கு நிதி பள்ளிக் கல்வித் துறைக்காக ஒதுக்கப்பட வேண்டும். ஏழு விதமான உறுதிமொழியை தங்களின் முதலமைச்சர் அவர்கள்தான் சொன்னார் என்று சொன்னீர்கள். நன்றாக கவனித்துப் பாருங்கள். திருச்சியில் நடந்த மாநாட்டில் அந்த ஏழு உறுதிமொழியை சொல்லும்போது, அதனுடைய கால அளவு என்பது பத்து ஆண்டுகள் என்று வைத்திருந்தோம். அந்த பத்து ஆண்டுகளில், இதுவரையில் கிட்டத்தட்ட 1.8 அளவுக்கு அதிகப்படுத்தி இருக்கிறோம். பத்து ஆண்டுகளில் கண்டிப்பாக மூன்று மடங்கை தாண்டுகிற அளவிற்கு நம்முடைய பள்ளிக் கல்வித் துறைக்கு budget ஒதுக்குவோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) SMC-ஐப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் Lady Willingdon பள்ளிக்கூடத்திற்கு கொடுத்தது, ஏனென்றால் It's a Central Government Act. But, அதன் கட்டமைப்பை நாம் வலுப்படுத்த வேண்டுமென்று அனைவருக்கும் விழிப்புணர்வு கொடுத்து, இன்றைக்கு ஆங்காங்கே அது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதனுடைய resolution நாம் இங்கே வாங்கிக் கொண்டிருக்கிறோம். நம்முடைய பேராசிரியர் பள்ளி வளாகத்தில் ஒரு central assessment வைத்துக் கொண்டு. எந்தெந்த resolution யார் அதிகமாகக் கேட்கிறார்கள், ஒரு பள்ளிக் கூடத்திற்குத் தேவையாக எது தமிழ்நாடு முழுவதும் பேசப்படுகிறது என்கிற அடிப்படையில்தான் பல்வேறு திட்டங்களை இன்றைக்கு நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக, வளர்ச்சி என்று வரும்போது, தரமான கல்வியை வழங்க வேண்டுமென்று நீங்கள் சொல்லி இருக்கிறீர்கள். குறிப்பாக, United Nations-ன் Sustainable Development Goals 17 விதமான goals கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை அனைத்து countries-ம் adapt செய்திருக்கிறார்கள். அந்த 17 விதமான goals-ஐ இந்தியாவும் adapt செய்திருக்கிறோம். அதில் சமீபத்தில் NITI Aayog மூலமாக வரப்பெற்ற செய்தியைப் பார்த்தால், தரமான கல்வி வழங்குவதில் நம்முடைய தமிழ்நாடு இன்றைக்கு நான்காவது இடத்தில் இருக்கிறது என்பது நமக்கான பெருமை. (மேசையைத் தட்டும் ஒலி) Because, இவ்வளவு திட்டங்களை நாம் செயல்படுத்திக் கொண்டே வருகிறோம். மேலும், ஒரு நல்ல கருத்தாக teachers நிறைய தேவை என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் இன்றைக்கு இருக்கும் நிலைமையைச் சொல்கிறேன். Primary grade I-லிருந்து V வரை பார்த்தீர்கள் என்றால் 20 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர், national average 21 என்றால் நாம் 20 கொடுக்கிறோம். ஆறாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை national average 18 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்றால், நாமும் 18 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் கொடுக்கிறோம். Secondary grade என்று வரும்போது national average 16 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்று சொன்னால், நாம் 11 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியரைக் கொடுக்கிறோம். நாம் அதிகமாகப் பார்க்க வேண்டியது, PG teachers சிறிது அதிகப்படுத்த வேண்டும். PG teachers சார்ந்து, இந்த ஆட்சிக் காலம் மாறிய பிறகு 384 நபர்களை நாம் எடுத்திருக்கிறோம். வருங்காலத்தில் 1,915 நபர்களை நாம் எடுக்க இருக்கின்றோம். Secondary grade teachers பொறுத்தவரையில் 2,768 நபர்களை நாம் எடுக்கப்போகிறோம். அதற்கான key answers-ஐ நாம் கொடுத்திருக்கிறோம். இவ்வாறு ஒவ்வோர் ஆண்டும் எவ்வளவு தேவையோ, அதை சிறிது சிறிதாக நிரப்பும் பணிகளை நாம் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம் என்பதை சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி குறிப்பிட்டார்.



சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டம், கஞ்சநாயக்கன்பட்டி கிராமத்தில் பட்டாசு வெடித்து உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 3 இலட்சம் ரூபாய்க்கான காசோலையினை, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேற்று (26.04.2025), சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு நேரில் சென்று உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கி, ஆறுதல் கூறினார். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் சுகுமார் ஆகியோர் உள்ளனர்.

---

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! நாகவள்ளி பிரபாகரன் எம்.சி. தலைமை!

## சென்னை கிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில் விளையாட்டு வீரர்களுக்கு உபகரணங்கள்!

### அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் – பி. வில்சன் எம்.பி. வழங்குகின்றனர்!

*சென்னை, ஏப்.27-*

*சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க., சுற்றுச்சூழல் அணி சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு மனிதநேயம் - 68, உறுதி எடு களமாடு! உச்சம் தொடு விளையாடு! என்னும் தலைப்பில் அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழா இன்று (27.4.2025 ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.00 மணி அளவில் சென்னை அம்பத்தூர் டன்லப் மைதானத்தில் நடைபெற உள்ளது*

*விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழாவில் சென்னை கிழக்கு மாவட்ட சுற்றுச் சூழல் அணி அமைப்பாளர் திருமதி ஜி.வி நாகவள்ளி பிரபாகரன் எம்.சி. தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே. சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், அம்பத்தூர் வடக்கு பகுதி கழக செயலாளர் ஜோசப் சாமுவேல் எம்எல்.ஏ, பி.கே மூர்த்தி எம்.சி,*

*அம்பத்தூர் தொகுதி தேர்தல் பார்வையாளர் சன். பி.முனியாண்டி, டி. எஸ்.பி. ராஜகோபால் எம்.சி,எம்.டி. ஆர் நாகராஜ், டாக்டர் ஜி சாந்தகுமாரி எம்.சி, வி ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி,டாக்டர் ஏ.பி. பூர்ணிமா எம் சி, எல்.பி.எப். மோகன், து.ஆயிரம், கு. கிருஷ்ணமூர்த்தி, ஜெ. பாலமுருகன், க. பொற்கொடி எம்.சி, அ. திராவிட செல்வம், க. முரளி பாபு, க. கதிஜா, மா. ரமேஷ், மு. நடராஜன், து செல்வராஜ், ஆர். கதிரவன், எஸ். கவிதா செல்லதுரை, கு. சங்கர், து. ஜெகநாதன், பி. ஆர். இளங்கோவன், பா. பொற்செழியன், ரா. லட்சுமி ரங்கசாமி, மேனாம்பேடு இ. ராமு முன்னிலை வகிக்கின்றனர்*

*அம்பத்தூர் வடக்கு தெற்கு கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் மா. கமல் எம்.சி வே. ரவீந்திரன், பூ.வீரா (எ) வீரராகவன், வெ. ராதாகிருஷ்ணன், மு. இரகு, தா. பிரகாஷ் குமார், சி சீனிவாசன், எம்.இ. சேகர் எம்.சி, நா. நெப்போலியன், இரா. டீக்கா, த.வ. லால், மு. சண்முகம், ஆ. சுந்தர்ராஜ், சீ. லோகநாதன், சு.மோகன் குமார், மு. விஜயகுமார் எஸ். உமா எம். சி, உஷா நாகராஜ் எம். சி, மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.பி ஹரி கிருஷ்ணன் ஆர். ஜெயராமன், சோ. மதியழகன் வரவேற்கின்றனர்.*

*இந்நிகழ்ச்சியில் விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், தலைமை கழக சட்ட தலைமை ஆலோசகர் வழக்கறிஞர் பி. வில்சன் எம்.பி. ஆகியோரும் வழங்கி சிறப்பிக்கின்றனர்.*

*மேலும் நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஜே.ஜாவித் கான், ஆர் விஜய், மா. செந்தில் குமார், அம்பத்தூர் வடக்கு கிழக்கு தெற்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள் க. ஜீவா, மா. குப்புசாமி,பி.வி மூர்த்தி, பொன். நாகராஜ் ரவி, எஸ்.பி. ஹரி கிருஷ்ணன், எம். குணசேகரன் ப. மதி, ஆ. இரா. அருண், கோ. சேகர் லால், பொ. சேதுராமன் (எ) பொன் சேட்டு, ஏ. கே.டி. பாஸ்கர், எஸ். சவரி முத்து, பா. மாறன், பி. சுரேஷ் பாபு, எஸ்.கே. சதீஷ்குமார், எஸ்.எம் முருகானந்தம், ஏ.வி. தட்சிணாமூர்த்தி, கே. செல்வம், கோ. முத்துக்குமாரசாமி, கோ. ராஜ்குமார், தா. குமாரவடிவேல், சா. கோதண்டன், கோ. இன்பசேகரன், இ.நடராஜன், ஆர். விமலன், ஜெ. ஐயப்பன், எஸ். பரமசிவம்*

*மாவட்ட பிற அணிகளின் துணை அமைப்பாளர்கள் கு. வேணுகோபால், பக்கீர் மைதீன், கே. எஸ். வரதராஜன், பிரவீன் குமார், பிரகாஷ் ஆனந்த் மோகன் பாபு, என்.மோகன், டாக்டர் பூபாலன், டாக்டர் ஜலால், டாக்டர் அன்பு, கே ராதாகிருஷ்ணன், ஆர். செல்வம், ராதாகிருஷ்ணன், தமிழ்செல்வன், யோதவ் குமார், இலக்கியா, பி. பாலாஜி, கே. அன்பரசு, மரிய கலைச்செல்வன், ஜஸ்டின் பிரபு, ஜெயபாலன், ஆர். எம், இளங்கோ, எஸ்.சிவசண்முகம், ஆ.ப்ரகாஷ், ச. கோவிந்த்,ரா. பாலசந்தர், எஸ் துரை கணேஷ், கே. பிரகாசம், ரா.மகேஸ்வரி, ஸ்னோபா கிருஷ்ணமூர்த்தி, ஆசை ஆரோக்கியம், தில் மகேஷ், அசோக் ஆண்ட்ரூஸ், எம். பாலகிருஷ்ணன்(எ) அண்ணாதுரை, சா. ஜெகநாதன், டி. ஸ்ரீதரன், வி இராமு, இரா. பாலமுருகன், எம்.இ.எஸ் சந்தோஷ் குமார், மு.க.ஆ. ரியாஸ் முகமது, வி.பி ரவீந்திரன், என். ஸ்ரீதரன், ஆர். பிரேம்குமார் எஸ். பிரவீன் குமார், ஆ. நாதன், வி. மகேஷ்பாபு,பி. ஜெயபிரகாஷ், ஏ.என்.ஆர் செந்தில்குமார் எஸ். அன்புச் செல்வன், எஸ். பாண்டியன், மெல்வின் ஜோதி,எம்.எஸ் ரமேஷ், சி.லதா, ஏ.கே.பி கிருஷ்ணன், வி. மிலன், சா. மோகன்ராஜ், க. சத்யநாராயணன், எம்.இ. சந்தீப், எல். ஜெய்லான்ஸ், சுந்தரராஜன், கே. மகேஷ்,கே. எம். சாம்சுந்தர், டி. பாலமுருகன், ஆர். ஜானகிராமன், ஆர். ஜெயபிரகாஷ், எ. விஜய், எஸ். விஜயகுமார், டாக்டர் வி சுதர்சன், ஏ அன்சார் அம்புரோஸ், டாக்டர் வி.ஜி சந்தோஷ், விஜய் அமர்நாத், த. சுரேஷ்குமார், அ. செல்வராஜ்,கோ. சங்கரி, வி. எஸ். தியாகராஜன், கு.சிவா,*

*அம்பத்தூர் தொகுதி பிற அணிகளின் அமைப்பாளர்கள் இரவை பிரபு, எம். வசந்தகுமார்,ஜே.பி. ஆர். ரகு, எம். மணிகண்டன், சாந்தகுமார், எஸ். கே. கோவிந்தன், எஸ். சௌந்தரராஜன் (எ) ராஜா, எம்.பி. சந்தோஷ், செ. இளங்கோவன், அ. முத்துக்குமரன், சு.பிரசாத் குமார், ச. சேக் அப்துல்லா, ச. ஜெகதீஷ், ர. சந்தானகிருஷ்ணன், ரா. பாலாஜி,கே. வி. சதி, செ. சந்திரசேகர், பா. உதயகுமார், ஆர். கலாநிதி, கு. கார்த்திக், தே. லோகு பிரகாஷ், திருநாவுக்கரசு, மு. சூர்யா, சரண்ராஜ் 85வது வட்ட நிர்வாகிகள் கே.சி கண்ணப்பன், ஆர். சூர்யா பிரகாஷ், ஆ. முருகன், எச். ஜானகி, க. ஜெயபால், எஸ். கஜேந்திரன், எஸ். பிரதாப், பா. குணசேகரன், ஜெய்கணேஷ், ஆர். தீனன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.*

*85வது வட்டச் செயலாளர் கண்ணபிரான் நன்றியுரை கூறுகிறார்.*



கடலூர் மாவட்டம்,நெய்வேலி என்.எல்.சி அங்கீகார,ரகசிய வாக்கெடுப்பு தேர்தலில், என்.எல்.சி தொ.மு.ச முதன்மை சங்கமாக வெற்றி பெற்றுள்ளது. தொ.மு.ச 2,507 வாக்குகள் பெற்று முதன்மை சங்கமாகவும், அண்ணா தொழிற்சங்கம் 1389 வாக்குகள் பெற்று இரண்டாவது அங்கீகாரம் பெற்றுள்ளது. பாட்டாளி தொழிற்சங்கம் 1385 வாக்குகளும், சிஐடியு 794 வாக்குகளும், திராவிட தொழிலாளர் ஊழிய சங்கம் 231 வாக்குகளும் ,பாரதி மஸ்தூர் சங்கம் 58 வாக்குகளும் பெற்றனர். இதன் அடிப்படையில் என் .எல். சி நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட முதன்மை சங்கமாக தொ.மு.ச,வும் இரண்டாவது சங்கமாக அண்ணா தொழிற்சங்கமும், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. தொ.மு.ச,முதன்மை சங்கமாக வெற்றி பெற்றதற்கான சான்றிதழை என்.எல்.சி தொ.மு.ச,பொதுச் செயலாளர் என். பாரி தேர்தல் நடத்தும் அதிகாரி சௌத்ரி அவர்களிடம் பெற்றுக் கொண்டார். தொ.மு.ச, பொருளாளர் ஆர்.ஐயப்பன் மற்றும் நிர்வாகிகள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.